கனடாவின் ஈழத்தமிழ் மக்களுக்கு:

இது அசாதாரணமான காலகட்டம். அசாதாரணமான மக்கள் அசாதாரணமான தீர்வுகளை உருவாக்கவேண்டிய காலகட்டம். நீங்கள் தான் அந்த அசாதாரணமான மக்கள். ஈழத்தமிழ் மக்களே ஒன்றுபடுங்கள்! முன்வாருங்கள்! தமிழீழத் தனியரசு உருவாக 'ஆம்' என்று வாக்களியுங்கள்.

நீங்கள் முன்வந்து சொல்லவேண்டியது எதுவென்றால், இதோ 1976 இல் உருவாகி 1977 இல் இலங்கைத் தீவின் வடக்கு கிழக்கு மக்களால் ஆணையளிக்கப்பட்ட வட்டுக்கோட்டைத் தீர்மானத்தின் அரசியற் சாராம்சக் கூற்று:

"இலங்கைத் தீவில் தமிழ் மக்கள் தனித்துவமான தேசியமும் பாரம்பரியத்தாயகமும் சுயநிர்ணய உரிமையும் கொண்டவர்கள் என்ற அடிப்படையில் இத் தீவின் வடக்கு, கிழக்கு நிலப்பரப்பில் சுதந்திரமும் இறைமையும் கொண்ட தமிழ் ஈழ அரசு உருவாகவேண்டும் என நான் விரும்புகிறேன்."

அசண்டையீனத்துக்கு அப்பால் வந்து ஒரு நிலைப்பாட்டை எடுப்பதற்கு நாங்கள் ஒவ்வொருவருமே வரலாற்றால் அழைக்கப்படுகின்ற காலங்கள் உண்டு. நாங்கள் கணக்கில் எடுத்துக்கொள்ளப்பட வேண்டுமானால், வெளிவந்தாகவேண்டிய காலம் இதுவே. உங்கள் குரலை உயர்த்துங்கள். துப்பாக்கிகளால் அல்ல, உங்கள் ஜனநாயக உரிமையால் வாக்களியுங்கள். தமிழீழம் என்ற சுதந்திரத் தாயகத்துக்கு 'ஆம்' என்று சொல்லுங்கள்.

'ஆம்' என்று வாக்களிக்கும் இந்த உரிமை எனக்கு இருந்திருக்கக் கூடாதா என்பதே எனது அங்கலாய்ப்பு.

எங்கள் முயற்சிகள் அனைத்துமே சுதந்திரத் தமிழீழத்தை விடுவிப்பதற்காக இருக்கவேண்டும். ஏனெனில், ஈழம் இருக்காவிட்டால் தமிழ் மக்களின் அடிமைநிலை ஒருபொழுதும் நீங்கப்போவதில்லை.

'ஆம்' என்று வாக்களிப்பதன் மூலம்,
தமிழரின் இழிநிலைக்கு இல்லையென்று சொல்லுங்கள்,
தமிழ் அடிமைநிலைக்கு இல்லையென்று சொல்லுங்கள்,
விடுதலையுள்ள தமிழீழத்துக்கு 'ஆம்' என்று சொல்லுங்கள்.

மதிப்பைத் தெரிவிக்கும்,
டாக்டர் எல்லின் சான்டர்